**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.375/2018**

2025–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22–ம் நாள் செவ்வாய்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 22.07.2025 | கணவர் பெயர்: | ராஜாங்கம் |
| பெயர்: | சகுந்தலா<br>(PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | தில்லைவிடங்கன் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 70/2025 |

**முதல் விசாரணை : 22.07.2025**

நான் இவ்வழக்கின் 2–ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபன பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபன பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபன பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 19.06.2013–ம் தேதியிட்ட எனது மகன் செல்வம் பெயரில் ஏற்பட்ட கிரய சாசன ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1**
2. 22.11.2011–ம் தேதியிட்ட எனது மகன் பெயரில் ஏற்பட்ட கணினி பட்டா இணையவழி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.2**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.